செ.வெ.எண்: 558 நாள்: 01.10.2021

**புதுக்கோட்டை மாவட்டத்தில்**

**முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்டம் மற்றும் பிரதமமந்திரி மக்கள் ஆரோக்கியத் திட்டத்தின்கீழ் பயனாளிகளுக்கு புதிய காப்பீட்டு அட்டைகளை மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி.கவிதா ராமு, இ.ஆ.ப., அவர்கள் வழங்கினார்.**

---

புதுக்கோட்டை மாவட்ட ஆட்சியரகக் கூட்டரங்கில் முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்டம் மற்றும் பிரதமமந்திரி மக்கள் ஆரோக்கியத் திட்டம் இணைந்து செயல்படுத்தும் திட்டத்தின்கீழ், பயனாளிகளுக்கு புதிய காப்பீட்டு அட்டைகளை மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி.கவிதா ராமு, இ.ஆ.ப., அவர்கள் இன்று (01.10.2021) வழங்கினார்

பின்னர் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் தெரிவித்ததாவது;

முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்டம் மற்றும் பிரதம மந்திரி மக்கள் ஆரோக்கியத் திட்டம் இணைந்து செயல்படுத்தும் திட்டத்தின்கீழ், இன்றையதினம் மாவட்ட ஆட்சியரகத்தில் 12 பயனாளிகளுக்கு புதிய காப்பீட்டு அட்டைகள் வழங்கப்பட்டுள்ளது. மேலும் 5 பயனாளிகளுக்கு பரிசு பெட்டகங்களும், காப்பீட்டுத் திட்டத்தில் சிறப்பாக பணிபுரிந்த 3 தொடர்பு அலுவலர்களுக்கு விருதுகளும் வழங்கப்பட்டுள்ளது.

மாண்புமிகு முன்னாள் முதலமைச்சர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் 23.07.2009 அன்று முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டு திட்டம் தொடங்கப்பட்டது. இத்திட்டம் பிரதம மந்திரி மக்கள் ஆரோக்கியத் திட்டத்துடன் ஒருங்கிணைந்து 23.09.2018 முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இதன்மூலம் திட்ட பயனாளிகளுக்கு ரூ.5 லட்சம் வரை காப்பீட்டுத்தொகை உயர்த்தி வழங்கப்படுகிறது.

புதுக்கோட்டை மாவட்டத்தில் முதலமைச்சர் விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்டம் மற்றும் பிரதம மந்திரி மக்கள் ஆரோக்கியத் திட்டத்தின் மூலம் புதுக்கோட்டை அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனை, அரசு மருத்துவமனைகள் மற்றும் தனியார் மருத்துவமனைகள் என மொத்தம் 23 மருத்துவமனைகள் மற்றும் 2 பரிசோதனை மையங்கள் அங்கீகரிக்கப்பட்டு, மக்களுக்கு சேவையாற்றி வருகிறது. இத்திட்டத்தின் மூலம் புதுக்கோட்டை மாவட்டத்தைச் சேர்ந்த 8,715 பயனாளிகளுக்கு

ரூ.1,66,70,37,914 மதிப்பில் சிகிச்சை அளிக்கப்பட்டுள்ளது. மேலும் புதுக்கோட்டை மாவட்டத்தைச் சேர்ந்த 4,17,164 குடும்பங்களுக்கு காப்பீட்டு திட்டத்தின் மூலம் பதிவு செய்யப்பட்டு காப்பீட்டு அட்டைகள் வழங்கப்பட்டுள்ளன.

கொரோனா தொற்றுக் காலத்தில், ஏழை மற்றும் எளிய மக்கள் நோய் பாதிப்பிலிருந்து மீண்டுவர, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் உத்தரவிற்கிணங்க 07.05.2021 முதல் புதுக்கோட்டை மாவட்டத்தில் உள்ள 7 தனியார் மருத்துவமனைகளில் முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்தின் மூலம் 696 பயனாளிகளுக்கு ரூ.7,63,88,797 மதிப்பில் சிகிச்சை அளிக்கப்பட்டுள்ளது என மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி.கவிதா ராமு, இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் இணை இயக்குநர் (ஊரக நலப்பணிகள்) மரு.இராமு, முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்ட அலுவலர் சுவாமிநாதன், மாவட்ட மனநல திட்ட அலுவலர் மரு.கார்த்திக் தெய்வநாயகம், மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலுவலர் குணசீலி, காப்பீட்டுத் திட்ட ஒருங்கிணைப்பாளர் முபாரக் மற்றும் அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

---

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், புதுக்கோட்டை.**